[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1995 மார்ச் 31

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்று புறநானூற்று ஆசிரியர் சொன்னபடி, குறிப்பிட்ட எதிர்க்கட்சியால் நல்லது செய்ய முடியாமல் போனாலும், நாட்டுக்கும், மக்களுக்கும், ஆட்சிக்கும் கெடுதலாவது இனிமேலாவது செய்யாமல் இருங்கள் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. தொடர்ந்து ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் முன்மொழியப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும். இந்த அளவில் நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிவு பெறுகிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(3-4-95)* காலை 10 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

82. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1991-92-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

83. 1993-94-ஆம் ஆண்டிற்கான ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

84. 1993-94-ஆம் ஆண்டிற்கான அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

85. 1993-94-ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

86. 1993-94-ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

87. 1993-94-ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

88. 1993-94-ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

67. மனுக்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை, 1994-95.

68. மனுக்கள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை, 1994-95.

69. உடுக்குறியிடாத வினாக்கள்--விடைகள் பட்டியல் (பதினொன்றாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).